## ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 07.06.2019 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 06.06.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் –1**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ்கள் மற்றும் மாத இதழில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினகரன் | 23100/– |
| 2 | தினத்தந்தி | 20160/– |
| 3 | மாலை மலர் | 17640/– |
| 4 | துப்பறியும் விசாரணை மாத இதழ் | 9800/– |
| 5 | தினமணி | 15750/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 102**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –2**

உள்ளாட்சி தேர்தல் – 2019 ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வார்டு மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளுக்கான 29 வாக்குசாவடிகள் தேர்வு செய்யப்பட்டு மவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்க அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, வாக்குச்சாவடிகளுக்கான வரைபடம் மற்றும் தரை வரைபடம் மற்றும் வாக்கு பெட்டி மற்றும் வாக்கு எண்ணிக்கை முதலான வரைபடம் மற்றும் வார்டு மறுவரையறை தொடர்பான இறுதி பட்டியல் தயார் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.55,550/– வழங்க கேட்டு ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 103**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –3**

பொது தேர்தல் – 2019 திண்டுக்கல் 128/32 பாரளுமன்ற தேர்தல் வரும் 18.04.2019–ல் நடைபெற உள்ள அறிவிப்பினை 10.03.2019 இந்திய தேர்தல் ஆணையம், அறிவிப்பு செய்ததை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் அமல் ஆனதன் காரணமாக நகராட்சி பகுதியின் அரசியல் கட்சிகள் பேனர், பிளக்ஸ் போர்டுகள், சுவர் விளம்பரங்கள் மற்றும் கொடி கம்பங்கள் உடன் அப்புறப்படுத்தும் பொருட்டு, விலைப்புள்ளி பெற்று எம்.எம்.கே கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்காக மேற்படி நிறுவனத்தாரால் பட்டியல் தொகை ரூ.1,94,630/– வழங்க கேட்டு, எம்.எம்.கே கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையினை தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கிடவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 104**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : - 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் –21 எண்ணம் தூய்மை இந்தியா பாரத திட்டம்–2018–19 ஆண்டு நிதியின் கீழ் தொகை ரூ.37.80 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.38984/2014/பி1 நாள்.11.01.2019–ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கொள்முதல் செய்ய 14.02.2019–ல் மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி செய்தி மக்கள் தொடர்பு துறை சென்னை மூலம் கோரப்பட்டதில் மேற்படி விளம்பரம் மார்க் மீடியா கம்யுனிக்கேசன்ஸ் நிறுவனம் மூலம் பிஸ்னஸ் ஸ்டாண்டு மற்றும் தினபூமி ஆகிய தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 24.01.2019–ம் நாளில் அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.17588/– மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப்பணிக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 105**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –5**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரத்தில் வழக்கு எண்: 58/2015–ன்படி வழக்கு நடைபெற்று வந்த நிலையில் மேற்படி வழக்கினை மாண்பமிகு நீதியரசர் அவர்களால் தள்ளுபடி செய்து தீர்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களிடமிருந்து வழக்கு கட்டணம் மற்றும் தீர்ப்புரை நகல் முதலான கட்டணங்களுக்காக தொகை ரூ.10,000/– வழங்க கேட்டு வரப்பெற்றப் பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 106**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட சர்வே எண். 231/34, மற்றும் 230/60 - 0.58 ஏக்கர் (2350.00 ச.மீ) பரப்பளவுள்ள இடத்தில் மனுதாரர் திரு. S. கோபு, த/பெ. சோமசுந்தரம், கதவு எண். 2/379 VIP நகர், விளாங்குறிச்சி ரோடு, விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் என்பவர் சொந்தமான இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க உத்தேசித்து வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களுக்கு உரிய வழியில் ஆணையாளர் மூலம் அனுப்பி வைக்க 4.1.2019ம் தேதியில் மனு கொடுத்துள்ளார்.

மனுவினை பரிசீலனை செய்து ந.க.எண். 956/2018/இ1, நாள். 18.01.2019 நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களுக்கு மனுதாரரின் மனுவினை பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 303/2019/மம3, நாள்.01.04.2019ம் தேதிய கடிதத்தில் மனைப்பிரிவில் வரும் உத்தேச சாலையினை தார்சாலை அமைத்து சாலையின் இருபுறமும் வடிகால் வசதி, பகிர்மான குழாய், தெருவிளக்கு உரிய அபிவிருத்தி பணிகள் செய்து அதன் போட்டோ நகல், உள்ளாட்சி தீர்மான நகல், தான பத்திர நகல் மற்றும் வில்லங்கச் சான்றுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மனைப்பிரிவில், தார்சாலை, மழைநீர் வடிகால், நல்ல முறையில் பணியினை முடித்துள்ளதாக நகராட்சி பொறியாளர் **14.05.2019ம்**தேதியில் சான்று வழங்கியுள்ளார். மற்றும் அதே தேதியில் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க மதிப்பீடு தயாரித்து ரூ. 30,000/- ஆகும் என தெரிவித்ததன் அடிப்படையில் மனைப்பிரிவு உரிமையாளர் ஆணையாளர் ஒட்டன்சத்திரம் நகராட்சி பெயரின் வங்கி வரைவோலை FEDERAL BANK ஒட்டன்சத்திரம் DD No. 176723 நாள். 28.05.2019ல் ரூ-30,000/- டிடி எடுத்து கொடுத்துள்ளார்.

2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு மின்கம்பம் அமைக்க மனுதாரர் ரூ. 26280,00/- ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நகராட்சி என்ற பெயரில் கட்டி ரசீது எண். MDD 261IA2S2988. நாள்.28.05.2019 ரசீது இணைத்துள்ளார். மனைப்பிரிவாக பிரிக்க தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியலின் படி ரூ.15000/- ஹெக்டேர் ஒன்றுக்கு நகராட்சி அலுவலகத்தில் பற்றுச் சீட்டு எண். 160/0D1/19-20/0002162, நாள்.28.05.2019 மனுதாரரால் கட்டி ரசீது இணைத்துள்ளார்.

3. மனுதாரர் தமே முன்வந்து மனைப்பிரிவில் உள்ள சாலையினை சார்பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண். 848/2019, நாள். 04.04.2019ல் ஒட்டன் சத்திரம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளார்.

4. எனவே மனைப்பிரிவு சாலையினை நகராட்சிக்கு தானமாக கொடுத்ததால், மனுதாரரின் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்

**தீர்மான எண். 107**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் – 7</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2018–19–ன் கீழ் ரூ.37.80 இலட்சம் மதிப்பீட்டில் 21 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (BOV) விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.38984/2014/பி1 நாள்.11.01.2019–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 14.02.2019–ந் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் 3 எண்ணம் OFF Line மற்றும் ON Line வழியாகவும், 1 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. ஓப்பந்த நிறுவனத்திற்கான தகுதி மற்றும் விலைவிகிதங்கள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் / 1 எண்ணம் | ஒப்பந்தப்புள்ளி தகுதி நிறைவு செய்வது பற்றி விவரம் | ஒப்பந்தப்புள்ளி நிராகரிப்பதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1 | M/s. Arun Indian Motars, 5, Gandhi Road, Salem. (Off Line, On line) | 179800 | நிறைவு செய்கிறது | – |
| 2 | M/s.Shuttlecars Inda Private limited, 67, Second Avenue, Ashok Nagar, Chennai. | 164550 | நிறைவு செய்கிறது | – |
| 3 | M/s. Neptune Automatical, 254, Arunachala Coundar Thottam, Veerappan Palayam, Erode. (Off Line) | 161900 | நிறைவு செய்கிறது | – |
| 4 | M/s. Priyam Industries & Equipment (P) Ltd, 48/88,Doublestreet, Kolinijivadi, Dharapuram (Off Line) | 161750 | நிறைவு செய்கிறது | – |

மேற்படி நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Priyam Industries & Equipment (P) Ltd, Dharapuram. நிறுவனம் ஒரு வாகனத்திற்கு ரூ.1,61,750/– என குறைவாக விலைவிகிதம் அளித்துள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் திட்ட பணியினை 31.07.2019–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்ன அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், 3 எண்ணிக்க நுண் உர தயாரிப்பு கூடங்களை பயன்பாட்டில் கொண்டுவர மேற்படி குபை சேகரிக்கும் வாகனங்கள் அவசியம் என்பதாலும் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், ததியில் M/s. Priyam Industries & Equipment (P) Ltd, Dharapuram நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.51/2019/இ1)

**தீர்மான எண். 108**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12 வார்டு ஓடை ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கு OS No.222/2013 மாவட்ட உரிமையல் நீதிமன்றம் ஒட்டன்சத்திரத்தில் திரு.ஆர்.நல்லசாமி த/பெ திரு.ராமசாமி கவுண்டர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் மேற்படியார் அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்து வழக்கு தாக்கலாகியுள்ளதை தொடர்ந்து மேற்படி நகராட்சி மூலம் எதிர்கொள்ள அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களால் கட்டணத்தொகை ரூ.10000/– வழங்க கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.733/2019/இ1

**தீர்மான எண். 109**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –9**

சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் ஒட்டன்த்திரம் 10 வது வார்டு தாராபுரம் சாலையில் திரு.எஸ்.ராமமூர்த்தி என்பவருக்கு சொந்தமான கதவு எண்–398,399,400,401,191,192,193,194 மற்றும் 195 ஆகிய கட்டிடங்கள் பழுது காரணமாக இடித்து அப்புறப்படுத்த நகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டதில் கதவு எண் 192,193 மற்றும் 194–ல் கடை நடத்தி வந்த செல்லா சில்க்ஸ் கடையின் உரிமையாளர் அதனை எதிர்த்து திருமதி.கண்ணா க./ப ஜெயபிரகாஷ் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற கிளை வழக்கு எண்.W.P(MD)No.10497 and W.M.P.(MD) No.9601/2018 -ன்படி வழக்கு நடைப்பெற்று வந்த நிலையில் மேற்படி வழக்கில் 18.02.2019 நாளில் தள்ளுபடி செய்து தீர்ப்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் அபயகரமாக இருந்த மேற்படி கட்டிடங்களை இடிக்க அரசு வழங்கறிஞர் திரு.கே.முருகேசன் ஒட்டன்சத்திரம் அவர்களிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டதற்கான கட்டணமாக ரூ.10000/– வழங்க கேட்டு வரப்பெற்றுள்ள பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 350/2018/இ1

**தீர்மான எண். 110**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வது வார்டு பொன்னகரம் பகுதியில் சர்வே எண்.411–ல் உள்ள பொது இடம் தங்களுக்கு சொந்தமானது எனவும் அவ்விடத்தில் நகராட்சி மூலம் எவ்வித பணிகளும் மேற்கொள்ள கூடாது எனவும் தெரிவித்து மாவட்ட உரிமையியல் நீதி மன்றம் வழக்கு OS No.34/2019 -ன்படி வழக்கு தொடர்ந்துள்ளதை தொடர்ந்து மேற்படி வழக்கினை நகராட்சி மூலம் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை எதிர்கொள்ள வழக்கு கட்டணமாக ரூ.10000/– வழங்க கேட்டு மேற்படி அரசு வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.734/2019/இ1

**தீர்மான எண். 111**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள்–2016–ன்படி, துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு தனியார் மயமாக்கல் முறையில் 140 நபர்களைக் கொண்டு பணி செய்வதற்கு 21.02.2019–ம் நாளன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் விவரங்கள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | நிறுவனம் பெயர் / முகவரி |
|---|---|
| 1 | M/S. Excell Neat and tidy agency,<br>RM Colony, Dindigul. |
| 2 | Thiru.P.Veerachamy, Contractor,<br>s/o. P.Palanichamy,<br>Oddanchatram. |
| 3 | Mr.W.JOHNSON Christopher, Director,<br>New riding house keeping Contract Industrial,<br>Co-Operative society,<br>Oddanchatram. |

வரிசை எண்.2–ல் காணும் திரு.பி.வீராச்சாமி ஒப்பந்ததாரர் ஆண்டு வரவு செலவு (Turn Over)காண்பிக்கப்படவில்லை. மேலும் முன்அனுபவ சான்றும் இணைக்கப்படவில்லை. வரிசை எண்.3–ல் காணும் திரு. Mr.W.JOHNSON Christopher அவர்கள் கூர்ந்தாய்வுக் கட்டணம் செலுத்தப்படவில்லை. மேற்கண்ட காரணங்களால் வரிசை எண்.2 மற்றும் 3–ல் காணும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படுகிறது.

வரிசை எண்.1–ல் காணும் M/S. Excell Neat and tidy agency-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு தகுதியிருந்தாலும், Single Tender என்பதால் ஏற்க முடியாத காரணத்தினால் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், இப்பணிக்கு செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களிடம் வாயிலாக 2 தினசரி நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் மற்றும் இதர செலவினம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
1. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   (865/2018/எச்1)

**தீர்மான எண். 112**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள்–2016–ன்படி, உருவாக்கப்பட்ட ஒட்டன்சத்திரம் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயலாக்கத் திட்டம் வரைவு இணைப்பு நகலினை அரசு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஒரு பக்கத்திற்கு ரூ.2,100/– வீதம் 27 பக்கங்களுக்கு ரூ.56,700/– அரசு கணக்கில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 113**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 13</u>**

மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் 01.04.2019–ம் நாளைய ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் 2016 சட்டமன்ற தேர்தலில் வாக்கு பதிவு சராசரியாக 65% குறைவான அளவில் பதிவானதை தொடர்ந்து, பொது தேர்தல் – 2019–ல் 18.04.2019–ம் நாளைய வாக்கு பகுதிவில் 100 % வாக்கு பதிவு விழிப்புணர்வு விளம்பர LED விளக்குகள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் தயார் செய்து நகராட்சி பகுதிகளில் பொது மக்கள் அறியும் வண்ணம் 1 முதல் 18 வார்டுகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தயார் செய்து பொருத்தி கொடுத்தமைக்கான பட்டியல் தொகை ரூ.155400/– வழங்க கேட்டு கருடா ஸ்டிக்கர், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. தேர்தல் அவசர அவசியம் கருதி பொதுமக்கள் அறியும் வண்ணம் 100 % வாக்கு பதிவு விழிப்புணர்வு விளம்பரம் ஏற்படுத்துவதற்கு தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 114**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 14</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 9 வது வார்டு காந்தி மார்க்கெட் பைபாஸ் சாலையில் புல எண்.220 –ல் உள்ள பாதையிடத்தில் கழிவு நீர் வாய்கால் அமைக்க ஆட்சேபனை தெரிவித்து திரு.முத்துச்சாமி த/பெ (லேட்) குப்பணகவுண்டர் ஒட்டன்சத்திரம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு எண்.WP(MD)6294/19 - WP(MD)5017/2019-ன் படி வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் நகராட்சி மூலம் மேற்படி பாதை வழியாக கழிவு நீர் வாய்கால் அமைக்க தடையாணை பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு..ஸ்ரீனிவாஸ் மதுரை மூலம் வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மேற்படி வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.12,500/– மட்டும் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 115**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 15</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12–வது வார்டு தும்மிச்சம்பட்டி புதூர் முதல் காவேரியம்மாபட்டி சாலை முடிய உள்ள கஸ்தூரி நகர் சாலையினை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ் ஓடையில் தடுப்புச்சுவருடன் கூடிய சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது மேற்படி சாலை விரிவாக்கம் செய்யப்பட்டதால், மேற்படி சாலையில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்கள் சாலையின் மத்திய பகுதியில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி சாலை வழியாக செல்லும் வாகனங்கள் மின்கம்பங்களில் மோதி விபத்து ஏற்படும் அபாய நிலை உள்ளதால், கஸ்தூரி நகர் சாலையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மின்கம்பங்களை போக்குவரத்திற்கு இடையூறின்றி மாற்றியமைக்க உதவி செயற்பொறியாளர், தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நகர் பிரிவு, ஒட்டன்சத்திரம் அவர்களிடம் கோரப்பட்டதில் மேற்படி பணிகளுக்காக மதிப்பீட்டு தொகை ரூ.190700/– மட்டும் செலுத்தக் கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை செலுத்த அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 116**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 16</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு வருவதால் பழனிக்கவுண்டன் புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டிடம் இடிக்கப்பட்டு தற்போது உள்ளூரில் உள்ள ஒரு தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லாததால் பள்ளி மாணவர்கள் மிகவும் சிரமத்தில் கல்வி பயின்று வருகின்றனர். தற்போது அனைவருக்கும் கல்வி திட்டம் மூலம் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டித்தர ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே கட்டடம் கட்ட ஏதுவாக சண்முகவேல்புரம் என்ற ஊரில் அமைந்துள்ள காளியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள புறம்போக்கு இடத்தில் புதிய பள்ளிக் கட்டிடம் அமைக்க உரிய அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 117**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 17</u>**

அரசாணை எண்.151 நிதித்துறை (ஊதியம்) நாள்.20.05.2019–ல் வெளியிடப்பட்ட அரசு பணியாளர்களுக்கான ஊதியத்துடன் வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியினை 9%–ல் இருந்து 01.01.2019 முதல் முன்தேதியிட்டு 12% ஆக உயர்த்தி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையின்படி, இந்நகராட்சி பணியாளர்களுக்கு 12%–அகவிலைப்படி வழங்க அரசாணையினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 118**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 18</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் ஆடு அறுவைச் சாலையில் அறுக்கப்படும் ஆடுகளுக்கு சுங்க கட்டண வசூல் செய்யும் குத்தகை உரிமைக்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் 25.01.2018–ம் நாளில் ஏலம் விடப்பட்டு, திரு.கே.நடராஜன், குட்டியாகவுண்டன் புதூர், ஒட்டன்சத்திரம் என்ற ஏலதாரருக்கு 2018–2019 முதல் 2020–2021 மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு ஓராண்டு நிறைவுறும் தருவாயில், மேற்படி ஏலதாரால் 2019–2020–ம் ஆண்டுக்கான குத்தகை தொகையினை செலுத்தாத நிலையில், மேற்படி இனத்தின் குத்தகை இனத்தினை ஓராண்டுடன் ரத்து செய்யப்பட்டது. மேற்படி இனத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என்ற நிலையில், தற்போது பொது தேர்தல் –2019 நடைபெறுவதால், தேர்தல் நடத்தை விதிமுகைளின்படி, ஏலம் நடத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி இனம் ஏலம் விடும் வரை நகராட்சிகள் சட்ட விதிகளுகளுக்குட்பட்டு, மேற்படி இனத்திற்கான சுங்க வசூலினை நிர்வாகம் மூலம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொது தேர்தல் –2019ன் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால், மேற்படி இனம் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் காலம் வரை நகராட்சி விதிகளுக்குட்பட்டு நிர்வாகம் மூலம் வசூல் செய்துகொள்ள தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, நகராட்சி மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 119**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 19</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக வாளகத்தில் ஆணையாளர் அறை, பொறியாளர் அறை, தணிக்கை அறை மற்றும் மன்ற கூடம் உட்பட 9 குளிர்சாதன கருவிகள் இயங்கி வருகிறது. மேற்படி கருவிகள் பழுது நீக்கம் செய்தமைக்காக எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன் ஒட்டன்சத்திரம் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிக்காக நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.34,240/–ஐ மட்டும் வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 120**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 20</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.60/செமதொஅ/2019 நாள்.14.03.2019 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, பாராளுமன்ற தேர்தல்–2019 தேர்தல் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த விளம்பர பலகைகள், போஸ்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்ஸ் ஆகியவை பொது இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க தெரிவித்துள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சிக்கு விளம்பர பலகைகள், போஸ்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்ஸ் ஆகியவை விநியோகம் செய்தமைக்காக சிட்டி கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்ட்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.63,648/–ஐ மட்டும் வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியானது பாராளுமன்ற தேர்தல் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 121**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 21</u>**

இந்நகராட்சியில் அனைத்து வரி இனங்களின் 2019–20–ம் ஆண்டுக்கான கேட்பு, நிலுவை மற்றும் நடப்பு வசூல் செய்வதற்கு கேட்பு அறிவிப்பு மற்றும் இதர அறிவிப்புகள் அச்சடித்து பொதுமக்களுக்கு வழங்கி வரி வசூலினை தீவரப்படுத்தி நகராட்சிக்கு வருவாய் பெறுவதற்கு, மேலும் மேற்கண்ட அறிவிப்புகள் அச்சடித்து வழங்க உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/– தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியானது நகராட்சி வருவாய் சம்மதமானவை என்பதால், அவசர அவசியம் கருதி பணி செய்யவும், மேலும் அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 122**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 22</u>**

தேர்தல் ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4564/INST/2019/EPS நாள்.16.03.2019 மற்றும் முதன்மை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் அரசு செயலர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1122/2019–21, நாள்.30.03.2019–ன் உத்தரவுபடி, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.1381/2019/எ10 நாள்.08.04.2019–ன் வழிகாட்டுதல்படி, பாராளுமன்ற தேர்தல்–2019–ல் 18.04.2019–ம் நாளில் நகராட்சி பகுதிகளில் நடைபெறும் தேர்தலில் 27 வாக்கு பதிவு மையங்களில் ஆண், பெண் இருபாலருக்கான தடுப்புகள், வேணல் பந்தல், குடிநீர் வசதி, வாக்கு பதிவு மையங்களை சுற்றிலும் உள்ள கல், மண் மேடுகள், மரங்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் இரண்டு வாக்கு பதிவு மையங்களில் வாக்காளர்களை கவரும் வகையில் சிறப்பு முகாம்கள் அமைத்தமைத்தது மற்றும் மாற்று திறனாளிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வாகன வசதி ஏற்படுத்துதல் முதலான பணிகள் மேற்கொண்டமைக்காக கீழ்க்கண்டவாறு, வரப்பெற்ற பட்டியல்கள் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஜாக்கி கிலாத்து, நடைபாதை மேட், தூண், தடுப்பு துணி சப்ளை செய்து பணிகள் மேற்கொள்ளுதல் | ஜி.வி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | 1,61,080 |
| 2 | தண்ணீர் வசதி, மைக்செட், சீரியல் லைட், டிரம் செட், வாழை மரம், பிளக்ஸ், ஆம்புலன்ஸ், போக்கஸ் லைட், வரவேற்பு டேபிள் சப்ளை செய்து பணிகள் மேற்கொள்ளுதல் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | 82,710 |
| 3 | பேரி காட் சாமியான பந்தல் அமைக்கும் பணிகள் | ஜி.வி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | 2,57,040 |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. தேர்தல் ஆணைய உத்தரவுபடி, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித வழிகாட்டுதலின்படி, பாராளுமன்ற தேர்தல்–2019 அவசரப் பணியாக விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 123**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 23**

ஒட்டன்சத்திரம் நகராட்சி புதிதாக நகராட்சி பொறியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை அணைகள் எண்.13644/2018/எப்1 நாள்.27.02.2019–ன்படி நகராட்சி பொறியாளர் நியமனம் செய்யப்பட்டுள்ள இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் விருப்பாட்சி தாலையூத்து நகரில் இருந்து 8 கி.மீ தொலைவில் உள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் கருதி இந்நகராட்சி வாகன எண்.TN 57 AW 4037-ஐ நகராட்சி பொறியாளர் மற்றும் பொறியியல் பிரிவு பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ள தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொறியாளர் மற்றும் பொறியியல் பிரிவு பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 124**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 24**

ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2019–க்கான 29 வாக்குச்சாவடி பட்டியல் தயார் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 04.03.2019–ம் நாள் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாக்குச்சாவடியில் சாய்வு தளம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், அதற்கான செலவினம் தொகை ரூ. 3.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 125**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 25**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் மின் விளக்குகள் மற்றும் சுவிட்ச் பாக்ஸ்கள் பழுதடைந்துள்ளதால், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, மேற்டி பணிகள் ஆகும் செய்ய உத்தேச தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 126**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 26**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய IDSMT மேல் மாடிக் கடைகள் 4, 7, 8 மற்றும் 9 ஆகிய கடைகளின் உரிமையாளர்கள் 2018–19–ம் ஆண்டு வாடகை மறு சீராய்வு செய்ததில் வாடகை தொகை கூடுதலாக உள்ளதாக தெரிவித்து, தொடர்ந்து கடைகள் நடத்த இயலாத காரணத்தால், கடையை 31.03.2019–ம் நாளளுடன் ஒப்படைப்பு செய்ததை தொடர்ந்து, மேற்படி கடைகளுக்கான உரிமத்தை 01.04.2019–ம் நாள் முதல் ரத்து செய்யவும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. வாடகை தொகை நிலுவை ஏதுமின்றி செலுத்தி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால்,, நகராட்சியின் வருவாயினை கருதி, பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.524/2019/இ1)

**தீர்மான எண். 127**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 27**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் சேகாரமாகும் குப்பைகளை அகற்ற ஜெ.சி.பி வாகனம் மூலம் அப்புறபடுத்தும் பணி மேற்கொள்ள நாள்.26.02.2019–ல் தனி அலுவலரின் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 08.03.2019–ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வேலையின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஹச்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன்,<br>திரு.ஹச்.முகமது ரஸ்மி,<br>943, சம்சுதீன் காலனி, ஓட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | 925/–<br>4000/– |
| 2 | கே.ஆர்.எர்த் மூவர்ஸ்,<br>திரு.வி.குமார்,<br>அத்திக்கோம்பை, ஒட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | 1000/–<br>4300/– |
| 3 | அம்மன் எர்த் மூவர்ஸ்,<br>திரு.எஸ்.ராம்குமார்,<br>சென்போஸ்ட், ஒட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | 950/–<br>4500/– |

மேற்காணும் 3 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றதில் வரிசை எண்.1–ல் உள்ள ஹச்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 128**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 28**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 26.04.2019–ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கழிவு நீர் செல்லும் கால்வாய்களிலும், சிறு பாலங்களின் இருபுறமும் அடைப்பு ஏற்படாதவாறு சுத்தம் செய்தல் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும், வரத்து வாய்க்கால்களை துார்வாருதல். குளம், வாய்க்கால் திறந்த வெளி கிணறு ஆகிய நீர்நிலைகளை நகராட்சி கட்டுப்பாட்டின்கீழ் பார்த்துக்கொள்ளுதல் இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்காணிப்பதோடு அவற்றிற்கான நீர்வழி தடங்களை சரி செய்வதோடு அவற்றில் ஏற்படும் உடைப்புகளை மணல் மூடைகளை அடுக்கி உடைப்பினை சரிசெய்தல் மேலும் சாலைகளில் உள்ள மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் ஏதேனும் சாய்ந்து சாலை வழிப்பாதை செல்ல முடியாமல் இருந்தால் அதனை சரி செய்தல் முதலான முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் பகுதியில் பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி பகுதியில் உள்ள நீர் வழித்தடங்கள் ஓடைகள் பாலங்கள் மற்றும் வடிகால்கள் தூர்வாறும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம்அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 129**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 29**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு பழனிகவுண்டன்புதுாரில் செயல்பட்டு வந்த பள்ளிக்கட்டிடம் நெடுஞ்சாலை பணிக்காக அப்புறப்படுத்தியதை தொடா்ந்து தனியார் இடத்தில் இயங்கி வருவதால் சண்முகவேல்புரம் பகுதியில் பள்ளிக்கட்டிடம் கட்ட இடம் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பகுதியில் புல எண்.825 நத்தம் அரசு புறம்புகல் இடத்தில் நகராட்சி மூலம் சமுதாய கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட தேவையான இடத்தினை சமுதாய கழிப்பறையை அப்புறப்படுத்தி பணிகள் மேற்கொள்ள அப்பகுதி பொதுமக்களாலும் வட்டார கல்வி அலுவலர், ஒட்டன்சத்திரம் அவர்களாலும் கோரப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 13.02.2019 –ம் ஆய்வு கூட்டத்தில் 100 சதவீதம் தனிநபர் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்ட பகுதிகளில் உபயோகம் இல்லாத சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்களை மாற்றுத் திட்டங்களுக்கு பயன்படுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர், ஒட்டன்சத்திரம் ஆகியோர்களின் வேண்டுகோளின்படி, மேற்படி சமுதாய கழிப்பிடத்தை பள்ளி கட்டிடமாக மாற்றி அமைத்துக்கொள்ள வட்டார கல்வி அலுவலர், ஒட்டன்சத்திரம் அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. அப்பகுதி பொதுமக்களின் பள்ளி கட்டிடத்தின் அவசியம் கருதி புறம்புகல் காலியிடத்தில் உள்ள மேற்படி கழிப்பிடத்தை வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம் அவர்கள் அனுமதி பெற்று மாற்றி அமைத்துக்கொள்ள மன்றம்அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 130**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 30</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்புகளில் ஜன்னல்களில் கொசு வலை, கிச்சன் கபோர்டு, குளியல் அறையில் டவல் ராடு மற்றும் கதவுகளுக்கு ஸ்கிரீன் சப்ளை செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.60,000/– தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி, விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 131**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 31</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு வாரச்சந்தை நடத்த சொந்தமான இடம் ஏதுமில்லாத நிலையில் குத்தகை அடிப்படையில் 2018–2019–ம் ஆண்டு வரை நடைபெற்று வந்த நிலையில் நில உரிமையாளர்களல் தங்களது தேவைக்கக குத்தகை காலம் முடிவுறும் 31.03.2019–ம் நாளுடன் காலி செய்ய தெரிவித்ததை தொடர்ந்து, தகுதி இடம் தேர்தல் காரணமாக தேர்வு செய்ய இயலாத நிலையில் அதன் உரிமையாளரிடம் 3.50 ஏக்கர் நிலம் மட்டும் ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டு வாரச்சந்தைகள் நடைபெற்ற வருகின்றது. தற்போது ஒப்பந்த ஆவணம் செய்யப்பட்ட நில எல்லைக்குள் பாதுகாப்பு வேலி மற்றும் 1 வது வார்டு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பைப்லைன் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாரச்சந்தைக்கு வரும் கால்நடைகள், வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 132**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 32</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் 1 முதல் 18 வார்டு முடிய உள்ள பிராதான மெயின் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி உடன் சரிசெய்யும் பொருட்டு 2019–2020 ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 133**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 33**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஈப்பு வாகனம் எண். TN 57 AW 2867 க்கு வீல் அலெய்மெண்ட், வீல் பேலன்ஸ், டயர் சேசிங் மற்றும் கிளச் பெடல் போன்ற பராமரிப்பு செய்தமைக்கான திரு.கஜேந்திரன், இந்நகராட்சி ஓட்டுநர் என்பரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.1750/– ஐ மேற்படி ஓட்டுநருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி ஈப்பு வாகனம் அவசர பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்திடவும், மேற்படி செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.473/2019/எச்1)

**தீர்மான எண். 134**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 34**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் சுமார் 12,000 குடியிருப்பு உடன் 36,000 மக்கள்தொகையும் அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் 7500மாணவ , மாணவிகளும் வந்து செல்லும் மக்கள் தொகை 25,000 ஆக உள்ளது. டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மாதம் 2 முறை வீதம் 18 வார்டுகள் பேருந்து நிலையம், மார்க்கெட் பகுதி மற்றும் 14 பள்ளி மற்றும் கல்லூரியில் நிலவேம்பு குடிநீர் வழங்க ஏதுவாக ஆண்டு குறைந்த பட்ச தேவை 200 கி.கி பவுடர் தேவை என்பதாலும் எதிர்வரும் மழை காலத்தை கருத்தில் கொண்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கை பணிக்காக 200கி.கி நிலவேம்பு குடிநீர் பவுடர் வாங்குதற்கு உத்தேச செலவீனத் தொகை ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் பொதுமக்கள் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (731/2019/எச்1)

**தீர்மான எண். 135**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 35**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் 5 எண்ணம் நுண்ணுயிரி உரம் தயாரிப்பு கூடம் (MCC)அமைக்கப்பட்டு உள்ளது. மேற்படி கூடத்தில் குப்பைகளை அரைத்து தொட்டிகளில் முறைப்படி பதப்படுத்தப்படுகிறது. இருப்பினும் குப்பைகள் மக்குவதற்கு 80 நாட்களுக்கு மேல் ஆகிறது. எனவே சுழற்சி முறையில் குப்பைகளை அரைத்து கையாளும் பணியில் தொய்வு ஏற்படுகிறது. இதை போக்க குப்பையுடன் EM Solution தெளிக்கும்போது குப்பை விரைவாக மக்கி உரமாக மாறுகிறது . என்பது குப்பை மக்கும் தன்மையை ஊக்குவிக்கும் பாக்டீரியாவின் கரைசல் ஆகும். ஆதால் MCC பயன்படுத்துவதற்கு ஏதுவாக 178 லிட்டர் EM Solution வாங்குதற்கு உத்தேச செலவீனத் தொகை ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் பொதுமக்கள் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (730/2019/எச்1)

**தீர்மான எண். 136**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 36**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உரக்கிடங்கு இல்லாத நிலையில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்த முடியாமல் தேங்கிய நிலையில் சில இடங்களில் உள்ளது. மழைசாரலால் குப்பைகளிளில துர்நாற்றம் வீசுவதும் ஈக்கள் மற்றும் பன்றிகள் தொல்லை அதிகமாக உள்ளதால், மேற்படி இடத்தில் லெமன் கிராஸ் ஆயில் தெளிக்கப்படுவதால் கட்டுப்படுத்தலாம். எதிர்வரும் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி (Lemon Gross Oil) 100 லிட்டர் வாங்குதற்கு உத்தேச செலவீனத் தொகை ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் பொதுமக்கள் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். **(729/2019/எச்1)**

**தீர்மான எண். 137**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 37**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் H1N1 , INFA VIRUS தாக்கம் இல்லாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு மக்கள் கூடும் இடங்களில் மற்றும் பிற இடங்களில் லைசால் நோய்த்தடுப்பு கிருமி நாசினி தெளிப்பதற்கும், தரைதளம் கழுவுதற்கும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 900 லி வாங்குவதற்கு உத்தேச செலவீனத் தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் பொதுமக்கள் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். **(728/2019/எச்1)**

**தீர்மான எண். 138**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 38**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் செயல்பட உள்ள 5 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண் உரம் தயாரிக்கும் மையத்தில் (Micro Compost Centre) வீடுகளில சேகரம் செய்யப்படும் DOMESTIC HAZARDOUS விதிமுறைப்படி அப்புறப்படுதிட 5 எண்ணம் INCINERATUR வாங்கி பொருத்திட ஆகும் தொகை ரூ.2.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதரம் பொதுமக்களின் நலன் கருதி, மேற்படி INCINERATUR வாங்கி பொருத்திடும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 139**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 39</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை எண்.101 /1997 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை)—ன்படி, பொது சுகாதார பணி செய்யும் பணியாட்களை தோற்றுவிக்கும் விதம் குறித்து ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 2017—ம் ஆண்டு துப்புரவு பணிக்கு குறைந்தபட்ச தேவையாக 187 பணியாளர்கள் தேவையுள்ள நிலையில், 47 பணியாட்கள் துப்புரவு பணியாட்கள் மட்டுமே உள்ளனர். 14.06.2017 வரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவுப்படி, தனியார் மயமாக்கல் முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்ட நிலையில், பொது சுகாதார பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்க குறைந்தபட்ச தேவையாக 74 பணியாட்களை மகளிர் சுய உதவிக்குழக்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பணி செய்யப்பட்டு வருகிறது. இவர்களுக்கான மாத ஊதியம் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி பட்டியல்படி, ரூ. 332/— என்ற நிலையில் நகராட்சி மூலம் ரு. 188/— வழங்கப்பட்டது. 27.02.2019 மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தி SAFAI KARAMACHARIS – MEMBER FO SECRETARY – Government of India முன்னிலையில் அடிப்படை பணியாளர் (துப்புரவு பணியாளர்) வாழ்வாதாரம் குறித்து விவாதத்தின் போது நகராட்சியில் ரூ.188/— வழங்குவது தவறான செயல் எனவும் உடனே மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி பட்டியலில் உள்ள தொகையினை ரூ.332/— வழங்கி மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லையேனில் சம்மந்தபட்ட அலுவலரின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்ட நிலையில் நகராட்சி நிதி நிலை கருதி 01.06.2019 முதல் மேற்படி தொகையினை வழங்கும் பொருட்டு, தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கூடுதலாக தேவையுள்ள 140 பணியாட்களை தனியார் மயமாக்கல் முறையில் எடுத்துக்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு, மேல் நடவடிக்கையில் உள்ள நிலையில், ஒப்பந்தப்புள்ளி பெற்று முடிவு பெரும் வரையில் மேற்படி 74 பணியாட்களுக்கு மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் நலன் மற்றும் பொது சுகாதாரம் SAFAI KARAMACHARIS – MEMBER FO SECRETARY – Government of India அவர்களின் உத்திரவினை கருத்தில் கொண்டு முறையான ஊதியம் 01.06.2019 முதல் வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.
(185/2017/எச்1)

**தீர்மான எண். 140**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 40</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 9—வது வார்டு மார்க்கெட் பைப்பாஸ் சாலையில் தென்புறம் நடுப்பகுதியில் இருந்து வரும் கழிவுநீர் வெளியே செல்ல வழி இல்லாத காரணத்தால் நகராட்சி மூலம் மோட்டார் வைத்து இறைத்து நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் மழை பெய்தால் கழிவு நீர் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளதால், கே.ஆர்.மருத்துவமனை எதிரில் பைப்பாஸ் சாலை வழியாக பாலம் அமைத்து வடபுறமாக மேற்கில் இருந்து கிழக்கே சென்று ஓடையில் நீரை வெளியேற்றும் வண்ணம் 600mm ஆர்.சி.சி பைப் பதித்து தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் சுகாதார நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 141**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 41</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 10–வது வார்டு ரெட்டியார் பேட்டை மற்றும் 11–வது வார்டு மேட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதித்தல் பேவர் பிளாக் சாலை மற்றும் சிமெண்ட் சாலை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளவும், 9–வது வார்டு மார்க்கெட் பைப்பாஸ் மற்றும் 4–வது வார்டு சொசைட்டி காலனி பகுதிகளில் குடிநீர் விநியோக மெயின் பைப் பதித்து சாலை உயர்த்தும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 142**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 42</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் (IUDM) ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2018–2019 மற்றும் 2019–2020–ன் கீழ் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சின்னக்குளத்தினை மேம்படுத்தும்படுத்தும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(எம்.எ2) அரசாணை எண்.82 நாள்.23.08.2018–ல் சின்னக்குளத்தினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி பணியின் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.18281/2017/DO2 நாள்.04.01.2019–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 13.02.2019–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பணிக்கு மதிப்பீடு ரூ.700.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் M/s.Senbagam Construction, Tirupur மற்றும் M/s.Kanganam Construction, Tirupur ஆகிய இருவரின் தகுதிக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 25.02.2019–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Senbagam Construction,<br>15, Chinnamuthur,<br>Muthur post,<br>Kangeyam Taluk,<br>Tirupur District-638105 | மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.93% அதிகம் |
| 2 | M/s.Kanganam Construction,<br>Peramiyam,<br>Dharapuram Taluk,<br>Tirupur District. | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.96% அதிகம் |

மேற்படி இரண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள Senbagam Construction, Tirupur என்ற நிறுவனத்தின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.93% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 08.03.2019 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.87% உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் திட்ட பணியினை 31.08.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மான எண். 143**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 43</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சி குடிநீர் பயன்பாட்டிற்குரிய பிரதான மெயின் மற்றும் வார்டு பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள கேட் வால்வுகள் அவ்வபொழுது பழுதடைந்துவிடுவதால், அதிக அளவிலான குடிநீர் வீணாவதோடு, பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதனை தடுக்கும் பொருட்டு கேட்வு வால்வுகளை பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 144**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 44</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2018–19 ஆண்டுக்கான 15.02.2019 முதல் 31.03.2019 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0844 முதல் RF0906 முடிய, WS0117 முதல் WS0129 முடிய மற்றும் TFV089 முதல் TFV094 முடியவும் மற்றும் 2019–20 ஆண்டுக்கான 01.04.2019 முதல் 06.06.2019 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0001 முதல் RF0126 முடிய, WS0001 முதல் WS0029 முடிய மற்றும் TFV001 முதல் TFV011 முடிய, குடிநீர் நிதி TFV001 முதல் TFV003 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மான எண். 145**

அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 06.06.2019